கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

கலைகலாசார பீடம்

மூன்றாம் வருட முதலாம் அரையாண்டு சிறப்புக் கலைமாணித் தேர்வு 2011/2012

**PS/S** 3102 முதன்மையான அரசியல் முறைமைகள்

( **Study of Major Political System** )

நேரம் : 03 மணித்தியாலங்கள்

பகுதி I இல் இருந்து ஏதாவது மூன்று வினாக்களையும் பகுதி II இல் இருந்து ஒரு வினாவினையும் தெரிவு செய்து எல்லாமாக நான்கு வினாக்களுக்கு விடை தருக

---

பகுதி I

1. பின்வருவனவற்றினை விளக்குக.

i. அரசியல் முறைமையின் பொருளும் தன்மையும் ( 12 புள்ளிகள் )

ii. அரசியலமைப்பின் வளர்ச்சியினை நிர்ணயிக்கும் காரணிகள் ( 13 புள்ளிகள் )

2. பிரித்தானிய அரசியல் முறைமையினை பின்வரும் விடயங்களுடன் தொடர்புபடுத்தி விளக்குக.

i. பிரித்தானிய பிரபுக்கள் சபைக்கு சாதகமானதும் பாதகமானதுமான வாதங்கள் ( 13 புள்ளிகள் )

ii. பாராளுமன்ற இறைமை ( 12 புள்ளிகள் )

3. சிறு குறிப்பெழுதுக.

i. உலகநாடுகளிலுள்ள மேற்சபைகளுடன் ஒப்பிடும் போது அமெரிக்க செனட் சபை பலமானது (15 புள்ளிகள் )

ii. அமெரிக்காவில் ஜனாதிபதியைக் கட்டுப்படுத்தக் கூடிய காங்கிரசின் அதிகாரங்கள் ( 10 புள்ளிகள் )

4.

i. " சுவிச்சர்லாந்தின் பன்மைத்துவ சமூக அமைப்பு அந்நாட்டில் குறிப்பிடத்தக்க முரண்பாடுகளுக்கு காரணமாக அமையவில்லை" ஏற்றுக் கொள்கின்றீரா? காரணம் தருக. ( 15 புள்ளிகள் )

ii. சுவிஷ் இன்று முக்கியமான நாடாக கருதப்படுவதற்கான காரணங்கள் எவை? ( 10 புள்ளிகள் )

## பகுதி II

5. "ஜனநாயகம் என்ற போர்வைக்குள் இருந்து கொண்டு சர்வாதிகார ஆட்சி நடாத்த பிரான்சிய அரசியலமைப்பு ஜனாதிபதிக்கு அனுமதியளிக்கின்றது" விமர்சிக்குக.

( 25 புள்ளிகள் )

6. தற்கால அரசியல் முறைமைகளில் நிர்வாகத்துறையின் ஆதிக்கம் மேலோங்கிக் காணப்படுகின்றது. அரசியல் முறைமைகளில் முதன்மையான நாடுகளை உதாரணமாகக் கொண்டு உமது விடையினை பரிசீலிர்க்குக.

( 25 புள்ளிகள் )